கிராம பகுதியிலே பருத்தி சாகுபடி என்பது உண்மையிலேயே குறைந்திருக்கிறது. எங்களுடைய பகுதியிலே, கோவை, பெரியார் மாவட்டம் போன்றவைகளை எடுத்துக் கொள்வீர்களானால், நூற்றுக் கணக்கான நூல் மில்கள் (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காஞ்சி பன்னீர் செல்வம், ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த இடத்திலே இன்னொரு உறுப்பினர் போய் நிற்பதே கூடாது. அதோடு நீங்கள் அங்கிருந்து பேசவும் செய்கிறீர்கள். உங்கள் இடத்தில் உட்காருங்கள். திரு. சின்னசாமி.

**திரு. வி. கே. சின்னசாமி:** கோவை, பெரியார் மாவட்டங்களில் பஞ்சு மூலம் ஆடை தயாரிக்கக்கூடிய பஞ்சாலைகள் இன்றைக்கு பெருகிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு தேவையான பருத்திகளை வெளி மாநிலங்களிலேயிருந்துதான் வாங்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதிலே மிகக் கஷ்டம் இருக்கிறது. பருத்தி போட்டு அதை தினந்தோறும் ஆட்களை வைத்து எடுக்க வேண்டியிருக்கிறது. அது மிக கஷ்டமாக இருக்கிறது. ஆகவே தான் பருத்தி சாகுபடி குறைந்து போயிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே கூட 10 ஏக்கர் 15 ஏக்கர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். எப்போதுமே கேள்வி கேட்கத் தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. வி. கே. சின்னசாமி:** தலைவர் அவர்களே, தாங்களும் விவசாய குடும்பத்திலே பிறந்தவர் என்பதால்தான் இதைச் சொல்கிறேன். தங்களுக்கு இது பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனாலேதான் கேள்வி சரியாக கேட்கத் தெரியவில்லை என்று சொல்லுகிறீர்களா? நேரிடையாக கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. வி. கே. சின்னசாமி:** ஆகவே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது, பத்து ஏக்க்ர் பருத்தி சாகுபடி செய்த விவசாயி இன்று ஒரு ஏக்கர் கூட செய்ய முடியாத சூழ்நிலை, கஷ்டம் இருக்கிறது. ஆகவே கரும்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல பருத்திக்கு என்று கட்டாயமாக ஒரு விலையை நிர்ணயம் செய்தால்தான் இந்த பருத்தி சாகுபடியை காப்பாற்ற முடியும். ஆகவே மாண்புமிகு அமைசசர் அவர்கள், நிச்சயமாக மத்திய அரசோடு கலந்தோ, அல்லது மாநில

*1995 நவம்பர் 10]*

அரசாங்கமே ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி இதைப் பாதுகாக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவரகளே, உணவின்றி தான் மனிதன் வாழ முடியாது. ஏனென்று சொன்னால் உணவு தான் முதல் தேவை. அதற்குப் பிறகு ஆடை. ஆடைகூட இருப்பதை தொடர்ந்து பயன்படுத்த முடியும். ஆனால் உணவு என்பது காலை, மாலை, இரவு ஆகிய 3 வேளையும் தேவை. எனவே, அரசாங்கத்தினுடைய முதல் கொள்கை பெருகி வரக்கூடிய மக்கள் பெருக்கத்திற்கு உணவை நாம் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான். உணவிலே அதிக கவனம் செலுத்துகிறோம். எனவே, பருத்தி நம்மிடத்திலே பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே, வெளிமாநிலங்களிலிருந்து இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. எனவே, இரண்டாவது நோக்கமாகத்தான் இன்றைக்கு நாம் கருதிக்கொண்டு இருக்கிறோம். பருத்தியினுடைய அபிவிருத்திக்கு பல்வேறு திட்டங்களை மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10.40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

**89—**

கிருஷ்ணகிரியில் மகளிர் விடுதி ஆரம்பித்தல்

**35864*—**திரு. கே. முனிவெங்கடப்பன்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் பணிபுரியும் மகளிர்களுக்கென விடுதி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?



வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 10

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டே ஆரம்பிக்கப்படும்.

**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மகளிராகப் பிறப்பிப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்பார்கள். அப்படி இந்த மண்ணிலே பிறந்த மகளிருக்கு சிறப்பு இல்லாமல் இருந்ததை மாற்றி இன்றைக்கு எல்லா துறைகளிலேயும் 30 விழுக்காடு அரசு பணி கொடுக்க வேண்டும் என்ற ஆணையை வழங்கி, அதுவும் குறிப்பாக காவல் துறையிலேயே கூட, 30 விழுக்காடு பணிகொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு, இந்தியத் துணைக்கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற ஒரு முதல் அமைச்சராக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கிருஷ்ணகிரி அருகில் இருக்கின்ற பல துறைகளிலேயும் பணியாற்றுகின்றவர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பாக இதை உருவாக்கிக் கொடுப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு அது எந்த இடத்திலே அமைய இருக்கிறது. எந்த அளவு மதிப்பீட்டிலே அது இயங்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிருக்கென ஆரம்பிக்கப்படுகின்ற விடுதிகள் முழுவதும் நகர்ப்புறங்களிலேயே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்த முடியும் என்கின்ற அடிப்படையில் கிருஷ்கிரியில் நகர்ப்புறத்திலேயே ஆரம்பிப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 39.83 லட்சம். மத்திய அரசின் சார்பாக ரூபாய் 29.87 லட்சத்தை மானியமாக வழங்கியிருக்கிறார்கள். 12 சதவீதத்தை தாட்கோ நிறுவனம் வழங்கியிருக்கிறது. ஆகவே, இவற்றைக் கொண்டு இந்த ஆண்டே அந்த மகளிர் விடுதி கட்டுவதற்கான பணிகள் துவங்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இதிலே 100 மகளிர் தங்கி பயன் அடையக் கூடிய வகையில் அந்த விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.